சுருக்கம்

பள்ளிக் கல்வி – சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வீதம் 32 மாதிரி பள்ளிகள் உருவாக்குதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (அகஇ1) துறை**

அரசாணை (நிலை) எண்.222

நாள் 24.10.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம் ஐப்பசி 7

படிக்கப்பட்டது:–

சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.131/என்2/இ1/2018, நாள் 13.06.2018, 09.07.2018 மற்றும் 06.08.2018.

*********

**ஆணை:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 01.06.2018 அன்று விதி எண்.110–ன் படி "மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வீதம் 32 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, கல்வி கற்பிக்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும், வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, இப்பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்படும் விதத்தில், ஒரு பள்ளிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 16 கோடி ரூபாய் செலவில் மாதிரிப் பள்ளிகள் உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

2. மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வீதம் 32 மாவட்டங்களில் 32 அரசு மேல்நிலைப் பள்ளிகளை தெரிவு செய்து அப்பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகம் (Hi-tech Lab), திறன் வகுப்பறை (Smart Class room), முழுமையான உபகரணங்களுடன் கூடிய ஆய்வகம், சோலார் விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள், வகுப்பறைகளில் கண்ணாடி இழையிலான கரும்பலகைகள், மாணவர்களுக்கு நவீன வசதியுடன் கூடிய விளையாட்டுத் திடல், நுண்கலைத் திறனை வளர்ப்பதற்கான வசதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மாதிரிப் பள்ளிகளாக உருவாக்கலாம் என்றும், பள்ளிக் கல்வித் துறையில் எந்தவொரு முன்னோடித் திட்டம் (Pilot Project) செயல்படுத்தினாலும் அவற்றை இந்தப் பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தலாம் என்றும், மாவட்டத்திலுள்ள சிறந்த ஆசிரியர்களை தெரிவு செய்து மாறுதல்களில் பணிநியமனம் வழங்கலாம் என்றும் மாதிரிப் பள்ளிகளாக உருவாக்க உத்தேச செலவினமாக ரூ.26,50,16,000/– (ரூபாய் இருபத்தாறு கோடியே ஐம்பது இலட்சத்து பதினாறு ஆயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும் என்றும், இவற்றுள் பள்ளி ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் 32 பள்ளிகளுக்கு ரூ.16 கோடி நிதியினை அரசு ஒப்பளிப்பாகவும் மீதமுள்ள ரூ.10,50,16,000/– தொகையினை சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு மற்றும் சமூக பங்களிப்பு திட்டங்களின் வாயிலாக பெறுவதற்கும் உரிய ஆணை வழங்குமாறு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வீதம் இணைப்பில் கண்டுள்ள 32 அரசு மேல்நிலைப் பள்ளிகளை உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் கூடிய முன்மாதிரியான மாதிரிப் பள்ளிகளாக உருவாக்கிடவும் தரமான கல்வியை அளிக்கும் விதமாகவும் L.K.G. முதல் 12ஆம்

வகுப்பு வரை ஒரே பள்ளியில் தொடங்கிடவும், இப்பள்ளிகளில் சில பிரிவுகளை ஆங்கில வழிக் கல்வியில் மாற்றி அமைத்திடவும், இத்துறையில் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துவதில் இப்பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கிடவும் மற்றும் மாணவர், ஆசிரியர் விகிதாச்சாரப்படி கூடுதல் ஆசிரியர்களை தேவையின் அடிப்படையில் மாறுதல் மூலம் பணி நியமனம் செய்திடவும், மாணவர்கள் கல்வி மட்டுமின்றி கலை மற்றும் விளையாட்டிலும் சிறந்து விளங்க இப்பள்ளிகளை அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரிப் பள்ளிகளாக அமைத்திடலாம் எனக் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 32 மாதிரி பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகள் உருவாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் பள்ளி ஒன்றிற்கு ரூ.50.00 இலட்சம் வீதம் 32 பள்ளிகளுக்கு ரூ.16,00,00,000/– (ரூபாய் பதினாறு கோடி மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை அனுமதிக்க ஒவ்வொரு பள்ளிக்கும் தேவைப்படும் கூறுகள் வாரியாக உள்ளபடியான செலவின விவரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பட்டியலை தயாரித்து அளிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், கூடுதலாக தேவைப்படும் செலவினத் தொகையினை சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி மற்றும் சமூக பங்களிப்பு திட்டங்கள் வாயிலாக பெற நடவடிக்கை மேற்கொள்ளவும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.50530/கல்வி–II/18, நாள் 16.10.2018–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
✓அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–II/ வரவு செலவு – I,II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 24/10/18
பிரிவு அலுவலர்
24.10.18.

**இணைப்பு**

**அரசாணை(நிலை) எண்.222, பள்ளிக் கல்வி (அகஇ1)த் துறை, நாள் 24.10.2018**

| வ. எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 1. | அரியலூர் | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செந்துறை. |
| 2. | சென்னை | அரசு மாகாண மேல்நிலைப் பள்ளி, எழும்பூர் |
| 3. | கோயம்புத்தூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, அசோகபுரம். |
| 4. | கடலூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, புவனகிரி. |
| 5. | தருமபுரி | தியாகி சுப்பிரமணிய சிவா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி. |
| 6. | திண்டுக்கல் | அரசு மேல்நிலைப் பள்ளி, நத்தம் கோவில்பட்டி. |
| 7. | ஈரோடு | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு. |
| 8. | காஞ்சிபுரம் | அரசு மேல்நிலைப் பள்ளி, பெருநகர். |
| 9. | கன்னியாகுமரி | கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோட்டார். |
| 10. | கரூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, ஜெகதாபி. |
| 11. | கிருஷ்ணகிரி | அரசு மேல்நிலைப் பள்ளி, காரப்பட்டு. |
| 12. | மதுரை | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, Y.ஒத்தக்கடை. |
| 13. | நாகப்பட்டினம் | அரசு மேல்நிலைப் பள்ளி, தோப்புத்துறை. |
| 14. | நாமக்கல் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மோகனூர். |
| 15. | பெரம்பலூர் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பாடலூர். |
| 16. | புதுக்கோட்டை | அரசு மேல்நிலைப் பள்ளி, பெருங்களூர். |
| 17. | இராமநாதபுரம் | எஸ்.என்.வி. அரசு மேல்நிலைப் பள்ளி, எமனேஸ்வரம். |
| 18. | சேலம் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஜாரிகொண்டாலம்பட்டி. |
| 19. | சிவகங்கை | அரசு மேல்நிலைப் பள்ளி, பீர்க்கலைக்காடு. |
| 20. | திருவண்ணாமலை | நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தேரடி வீதி. |
| 21. | தஞ்சாவூர் | அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, பட்டீஸ்வரம். |
| 22. | நீலகிரி | அரசு மேல்நிலைப் பள்ளி, தூனேரி. |
| 23. | தேனி | அரசு மேல்நிலைப் பள்ளி, சில்வார்பட்டி. |
| 24. | திருநெல்வேலி | ஏ.வி.ஆர்.எம்.வி. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அம்பாசமுத்திரம். |
| 25. | திருப்பூர் | ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பூர். |
| 26. | திருவள்ளூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, அலமாதி. |
| 27. | திருவாரூர் | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஜீயார் தோப்பு, மன்னார்குடி. |
| 28. | திருச்சி | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மண்ணச்சநல்லூர். |
| 29. | தூத்துக்குடி | எம்.பி.சி.எம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, எட்டையபுரம். |
| 30. | வேலூர் | ஈ.வே.ரா.நா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கொசப்பேட்டை. |
| 31. | விழுப்புரம் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம். |
| 32. | விருதுநகர் | அரசு மேல்நிலைப் பள்ளி, தியாகராஜபுரம். |

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
24/10/18
24/10/18